பல இருக்கின்றன. அனைத்து ஜனநாயகக் கருத்துக்களும் இங்கே உலவுகின்ற வண்ணம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ எடுக்க வேண்டும். சான்றாக, இந்த ஊர்வலத்திற்குக் கையெழுத்துப் போட்டால் தான் அனுமதி தருவோம் என்று சொன்னதையெல்லாம் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எல்லோரும் எல்லாக் கருத்தையும் சொல்லட்டும். நாட்டு மக்கள் நல்ல தெளிவானவர்கள், நல்ல தீர்ப்பு வழங்குவார்கள். ஆகையினாலே இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7—2—1992) முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

58. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான பதினொறாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

59. 1986-87ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை, 1991-92.

23. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1991-92.

———